# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ பங்குனி 1978 ★ இதழ் - 27


### ஒவ்வொன்றுக்கு ஒவ்வொருவர்

## வைத்திய சிரோமணி பி. எஸ். அவர்கள்

யாழ்ப்பாணத்து நல்லூருக்கு அணித்தாகவுள்ள இருபாலை என்னும் ஊர் அறிவாற்றல் நிரம்பிய பெரியார் பலரின் வாழ்விடமாக விளங்கியது. நினைவாற்றல்மிக்க நெல்லைநாத முதலியார் என்பார், தமிழ் நாட்டிலிருந்து வந்து வைத்திலிங்கம் செட்டியார் முன்னிலையில் பாடி அரங்கேற்றிய நூறு செய்யுள்களைக் கேட்டுக் கொண்டிருந்தவாறே பாடமாக்கியவர். அவர்தம் மைந்தர் சேனாதிராச முதலியார் பன்னிரண்டு மொழிகள் வரையில் அறிந்தவர், ஆறுமுகநாவலருக்குப் பன்முக ஞானம் ஊட்டியவர். திருக்கைலாய ஞான பரம்பரையை எங்கள் நாட்டில் நாவலரைக் கொண்டு பரப்பி நிலவச் செய்தவர். முத்துக்குமாரகவிராச சேகரத்தின் அத்தியந்த நண்பர். நல்லூர் மீது பல பிரபந்தங்கள் பாடிய பாவலர்.



இவ்வாறு இருபாலைக்குப் பெயர் தேடித்தந்த பெருமக்கள் பலருள் வைத்திய கலாநிதி சி. சுப்பிரமணியம் அவர்களும் ஒருவர். மாகாண சத்திர சிகிச்சை நிபுணராய் இருந்து 1938ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற அவருக்கு அவர் தம் உத்தியோகப் பெயரின் இரண்டெழுத்தாகிய P. S. என்பதே இயற் பெயராய் அன்றுமுதல் நிலவி வருவதாயிற்று. அவருக்கு முன்னரும் பின்னரும் எத்தனையோ P. S. மார்கள் வடமாகாணத்தில் சேவைசெய்து போன பின்னரும் P. S. என்றால் வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்களையே குறிப்பதாயிற்று.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலருக்குப் பின்னர் சமூக சேவை செய்த பெரியார்கள் பலராவர். தென்னிலங்கையில் அனகாரிக தர்மபாலாவும் நாவலர் வழியைப் பின்பற்றித் தமது சூழலுக்கேற்பத் தொண்டு செய்தவராவர்.

இருபாலையில் சமூகத்தொண்டர் சின்னத்தம்பி என்பார் பரம்பரை பரம்பரையாகப் பெருங்குடிமரபைப் பேணி தான தர்மம் செய்து செழுங்கிளை தாங்கியவர். அவர்தம் மனைவியார் கதிராசிப்பிள்ளையின் வயிற்றில் 1873ஆம் ஆண்டில் உதித்தவர் சுப்பிரமணியம் அவர்கள்.

### படிப்பு

சுப்பிரமணியம் அவர்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மதிப்புக்குரிய அபிமான மாணவனாய்க் கல்வி கற்ற பின்னர், இந்தியாவுக்குச் சென்று சென்னைக் கிறிஸ்

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

**கோயில்களிலும் குளங்களிலும் தெய்வ சாந்நித்தியம் உண்டு**

உ

# கடவுள் வணக்கம்

## திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்

### திருவிராமேச்சுரம் — திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

வாக்கினு லின்புரைத்து வாழ்கிலார் தம்மையெல்லாம்
போக்கினுற் புடைத்தவர்க ளுயிர்தனை யுண்டு மால்தான்
தேக்குநீர் செய்தகோயில் திருவிரா மேச்சுரத்தை
நோக்கினுல் வணங்குவார்கள் நோய்வினை நுணுகுமன்றே.

வாயால் இனியனவற்றையும் நல்லனவற்றையும் இன்பம் பயக்கத்தக்கதாகக் கூறி வாழமாட்டாத அரக்கர்களையெல்லாம் போக்கத்தக்க படையால் தாக்கி அவர்களின் உயிரை உண்டவராகிய திருமால் தேங்குதலையுடைய கடல் நீரில் கட்டிய அணைக்கரையில் அமைத்து வழிபட்ட திருக்கோயிலாகிய இராமேச்சுரத்தை அக நோக்காக மனத்திலும் புற நோக்காக சென்று வலம் வந்து வழிபாடு செய்கின்றவர்களின் நோயும், நோய்க்குக் காரணமான வினையும் குறையும்.

---




## வினைத் தூய்மை

செய்யப்படும் செயல்கள் பொருளோடு அறமும் புகழும் தருவனவாதலால் அவை தூய்மையாய் இருத்தல் வேண்டும்.

ஈன்ருள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றேர் பழிக்கும் வினை.

தனது தாயானவள் பசிகிடப்பக் காணவேண்டிய நிலை வந்தாலும் ஒருவன் நல்லவர்கள் வெறுத்து ஒதுக்கிய செயல்களைச் செய்தலாகாது.

### Intergrity in action

Though he sees his mother starving, let him not do those actions which are condemned by the wise.

---

'உதவிசெய்க' என்பது உலகின் பண்டைய விதி. அதுவே வாழ்வுக்கு மறுபெயர். மரணத்திற்கும் மறு பெயர் உண்டு. அது 'பிரிந்திரு' என்பதாகும்.

— ரஸ்கின்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வைத்திய சிரோமணி......

தவக் கல்லூரியிலும், திருச்சி சென்யோசேப் கல்லூரியிலும் மேற்படிப்புப் படித்தார். அதன்பின் வைத்தியப் படிப்புப் பெறுவதற்காகக் கல்கத்தாவுக்குச் சென்று, ஆங்குள்ள மிகப்பெரிய கல்லூரியிற் கற்றுப் பயிற்சிபெற்று இலங்கைக்கு மீண்டார்.

இலங்கையில் வைத்திய சேவையிற் சிலகாலம் கடமையாற்றியபின் நிபுணராகப் பயிற்சி பெறுவதற்கு இங்கிலாந்துக்குச் சென்ருர். அங்கே லண்டனில் உள்ள மருத்துவக் கல்லூரியில் வெப்ப மண்டல நோய்கள் சம்பந்தமான படிப்புப் பயிற்சியில் திறமையுடன் சித்தியெய்தினர். அத்தோடு றெட்னி மருத்துவப் பீடத்திலும் பயிற்சியும் பட்டமும் பெற்று இலங்கைக்கு மீண்டார்.

### சேவை

இலங்கைக்கு மீண்டபின் நாட்டின் பலபாகங்களிலும் மனிதாபிமானம், கடமையுணர்ச்சி, இரக்கம் முதலிய பண்புகள் ததும்பக் கடமையாற்றியபின் யாழ்ப்பாணத்திலே பல்லாண்டு பணிபுரிந்து சேவையிலிருந்து ஓய்வு பெற்றுத் தனியார்துறையாக வைத்தியம் செய்துவந்தார்.

### பொதுமக்கள் சேவை

அக்காலத்தில் பொதுமக்கள் அரசினர் வைத்தியசாலைகளைத் தருமாஸ்பத்திரி என இழிவாகக்கருதி, வைத்தியஞ் செய்யப் போவது மிகவும் குறைவு. செலவு கொடுத்து வைத்தியஞ் செய்தலே முறையென அவர்கள் கௌரவமாகக் கருதிய காலம் அது. அக்காலத்தில் இணுவில், மானிப்பாய் பெரும் புகழ் பெற்று நிலவியபோது, பி. எஸ். அவர்களின் வைத்திய மனை எண்கோணமனை என்னும் 'ஒக்ரோகன்' எட்டுத்திசையும் புகழ்பெற்று நிலவியது. கடற்கரையில் அவரின் இல்லத்தின் அருகிலமைந்த சின்னஞ் சிறு கிணறு, வற்ருத நன்னீரூற்ருக அமைந்ததில் வியப்பொன்றும் இல்லை. அவரே ஊராரால் உண்ணப்படும் வகையில் உழைத்தவர்தானே.

### தருமப்பணி

காட்சிக்கெளியராய் கடுஞ்சொல் பேசாதவராய் அறங்கிடந்த நெஞ்சினராய் அருளொழுகு கண்ணினராய்ச் சேவை செய்த பெரியாரிடம் பகலிரவாக நோயாளரும் வறியவர்களும் சமூகசேவை செய்பவரும் வருவார்கள். அவரிடம் தருமதேவதை குடிகொண்டிருந்தபடியால் எவருக்கும் இல்லை என்னுது இரண்டு மூன்று பெரிய தாள்களாவது அவர் கொடுப்பது வழக்கம். பெரிய தர்மப்பணிகளுக்கு நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் அள்ளிக் கொடுத்ததுமுண்டு. அவரின் வள்ளன்மையை நேரிற்கண்ட டொனமூர்ப்பிரபு அவரை வெகுவாகப் பாராட்டியுள்ளார். டொனமூர்ப்பிரபு 1927ஆம் ஆண்டில் இலங்கை அரசியல் திருத்தஞ் செய்ய இங்கே வந்தவராவர்.

### சைவப்பற்று

சைவசமயத்தில் பெரு மதிப்பும் பற்றுங் கொண்ட பெரியாரவர்கள் காசி, கல்கத்தா, சென்னை முதலிய இடங்களில் வெளியான மெத்தப் பெரிய அறிவு நூல்களை எழுத்தெண்ணிப் படித்து மிகப்பெரிய தத்துவ விற்பன்னராய் இருந்தவர். சைவ வித்தியா விருத்திச் சங்கம் வடபிரதேச

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

---

★ பசுவும் தென்னையும் காமதேனுவும் கற்பகதருவும் ★

# ★ மிளகு ★

திரிகடுகம் என்பதில் நடுவில் வரும் மிளகு வடமொழி இலக்கியங்களிலும் தமிழிலக்கியங்களிலும் அதிகமாகப் புகழப்படுகிறது. சுக்கு, மிளகு, திப்பிலி என்பன திரிகடுகம். மிளகு சாதாரணமாகச் சமையலுக்குப் பயன்படுவதோடு சிறப்புணவுகளிலும் இடம்பெறுகிறது. மருந்து வகைகளிலும் முதன்மை வகிக்கிறது. உறைப்புக்கு உபயோகமாகும் மிளகாய் நேற்று வந்த சரக்கு. பண்டைக் காலம் முதலாகப் பாரதநாட்டிலும் ஈழத்திலும் நன்கு பயிராகி அராபியர், போத்துக்கேயருக்கு முன்னர்; கிரேக்கர் உரோமர் முதலானோரை வெகுவாகக் கவர்ந்து வியாபாரத்தின் பொருட்டுத் திசைதிருப்பிய கறிச்சரக்கு மிளகு.

குளிர்சுரம், கபம், மூலம், வாயு, பித்தம், இருமல், தொண்டைக்கட்டு, சமியாக்குணம் முதலிய வேதனைகளுக்குக் கைகண்ட ஔடதம் மிளகு. பொங்கல் முதலிய சிறப்புணவுகள் எளிதில் சமிபாடாவதற்கு மிளகைச் சேர்க்கின்றார்கள். இது காரத்தையும், வாசனையையும், உருசியையும் தரும் சிறந்த சரக்கு.

நல்ல மழை பொழியும் மலைவளமுள்ள இடங்களில் உண்டாகிப் பெரிய மரங்களில் தாவிப்படர்ந்து வளரும் கொடியினத்துப் பயிர் மிளகு. இந்தியாவில் மலையாளப் பகுதி, மேற்கு மலைத்தொடர் முதலிய இடங்களிலும், இலங்கையில் மத்திய மலைநாட்டுப் பிரதேசத்திலும் மிளகு நன்கு பயிராகிறது. மலையாளத்து மிளகுக்குத் தனிமதிப்புண்டு.

உரோமரின் கப்பல்கள் பொன்னொடு வந்து மிளகோடு போன காலத்தைச் சங்க இலக்கியங்கள் அழகாகக் கூறுகின்றன. கள்ளிக்கோட்டை, கிராங்கனூர் முதலிய துறைமுகங்களிலிருந்து மிளகு ஏற்றுமதியாயிற்று. மிளகு மாத்திரமன்றி, கறுவா, ஏலம், கிராம்பு, இஞ்சி முதலியனவும் ஏராளமாக ஏற்றுமதியாயின. கறிச்சரக்கு வாங்க வந்த போத்துக்கேயர் பண்டசாலை கட்டிக் கோட்டை கட்டி நாட்டைப் பிடித்து ஆண்டதும் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. மெள்ள மெள்ள வந்தாலும் மிளகு சுக்கு என்றாலும் என்னும் பழமொழி தமிழ்நாட்டில் வழங்குவதொன்றாகும். இன்றும் உலக சந்தையில் மிளகுக்குத் தனிமதிப்புண்டு. அதனை எவரும் விளம்பரஞ் செய்வதில்லை. அமெரிக்கர் கோடிக்கணக்கான பணங்கொடுத்து மிளகை வாங்குகின்றார்கள்.

மிளகுதண்ணியின் அபாரகுணத்தை அறிந்த ஆங்கிலேயர் அதனை அப்படியே தங்கள் மொழியில் வழங்குகிறார்கள். மிளகுக் கசாயம் மிகவும் நன்மை தரும் என்று சித்த வைத்தியரும் ஆயுர்வேத வைத்தியரும் மெத்தப் புகழ்ந்துள்ளார்கள்.

பத்துப் பன்னிரண்டு மிளகை நொருக்கி நீரிட்டுக் காய்ச்சி வடித்துச் சர்க்கரையுடன் பருகுவதால் சுரம், வயிற்று மந்தம், கம்மல், இருமல், சமியாக்குணம் முதலியன குணமாகும். உமிழ்நீரை அதிகரிக்கச் செய்து சமிபாட்டைத் தூண்டும் குணம் மிளகுக்குண்டு. வாந்திபேதி, இரத்தபேதி முதலிய கொடிய நோய்களுக்கும் மிளகுப் பொடியை நெய்யிற் கலந்து கொடுக்கிறார்கள். சொறி, முதலிய தோல் வியாதிகளுக்கு மிளகையும் குப்பைமேனி இலையையும் அரைத்துப் பூசுவர். மிளகின் தனிப்பெருமை அது விடத்தை இறக்குவதாகும். விஷகடி வைத்திய நிபுணர் மிளகை மந்திரித்துக் கொடுப்பதும் உண்டு. கடுமையான தலைவலி தீரவேண்டின் மிளகினை முலைப்பாலில் நனைத்துப் பசுந்தாக அரைத்து நெற்றியில் பற்றுப்போடுவர்.

மிளகில் வெள்ளை மிளகு, வால் மிளகு என்னும் வேறு இனங்களும் உண்டு. வெள்ளை மிளகு வெப்பத்தைக் குறைத்துக் கண் பார்வையைத் தூண்டும். வெள்ளை மிளகினை மலையாளத்துப் பெருஞ் செல்வம் என மதிப்பர். இதனைப் பாலில் நனைத்து அரைத்துத் தலையில் பூசி நீராடும் வழக்கமும் இருந்தது. நெல்லி விதை, வேப்பம் விதை, கஸ்தூரி மஞ்சள், கடுக்காய்த் தோலுடன் கலந்து அரைத்துத் தேய்த்து நீராடுதலும் உண்டு. இதைப் பஞ்சகல்பஸ் நானம் என வழங்குவர்.

சங்கீத வித்துவான்கள் வாயிலிட்டு மெல்லும் வால் மிளகும் கற்கண்டும் அவர்களுக்குக் குரலினிமையைக் கொடுப்பதோடு தொண்டை கட்டாமலும் காக்கிறது.

எத்தனை வருட காலம் கிடந்தாலும் உழுத்துப் போகாமல் பயன்படும் மிளகு அற்புத சஞ்சீவி. அதன் இலைகளைப் பூச்சி புழுக்கள் அரிப்பதில்லை என்றால் அதன் மருத்துவ மேன்மையைக் கூறவேண்டுமோ. மிளகாயை நீக்கி மிளகினை உபயோகித்து உடம்பைப் பேணுவோமாக. ★



## சிவானந்த சீலம்

1. தொழிலில் அக்கறை உள்ளவன் முன்னேறுவான்
2. அளவாக உண்டு ஆற்றலுடன் பணிபுரிதல் ஆண்மை
3. உண்மைத் தன்மையிலும் உயர்ந்த அறம் உலகிலில்லை
4. கடவுளிடம் சரணமடையாமல் வாழ்வு சிறக்காது
5. தன்னலமற்ற சேவையே வாழ்க்கையின் உப்பு
6. கோபமும் காமமும் அமைதியின் எதிரிகள்
7. அடக்கமான வாழ்வே வளமான வாழ்வு
8. நமக்கு வரும் நோய்கள் கன்மசுத்தி செய்கின்றன
9. உன் கடமைகளைச் செய். உரிமைகள் தாமே வந்துவிடும்
10. கடவுளைக் காண்பதற்கு உன்னுள்ளே திரும்பிப்பார்

படகு தண்ணீரில் இருக்கலாம். ஆனால் தண்ணீர் படகினுள் நுழைந்தால் அதோகதிதான். நீ உலகில் வாழலாம். ஆனால் லௌகிகம் உன்னுள் புகுந்தால் உன்பாடு அதோகதிதான். இந்த உலகத்தில் வாழ். ஆனால் உலக விவகாரங்கள் உன்னைத் தாக்காமல் கவனமாக வாழ்வாயாக.

**அனுபவமும் உள்நோக்கும் மனத்தைத் திருத்துவன**

## மணியுரை



கடவுளின் வடிவு சுத்தமானது. அதற்கு நீதி என்று பெயர்.

நீதி வெகு ஆழமானது. அது நீளமானது.

நீதியை மறைக்குங் குற்றங்கள் அறியாமை, வஞ்சகம் என்னும் இரண்டுமாம்.

வஞ்சகம் நரகத்துக்கு வித்து.

வஞ்சகம் அறிவை மழுக்கி மாயஞ் செய்வது.

சிவம் என்ருல் நன்மை, மங்களம் நீதி என்று பொருள்.

நீதியோடு சம்பந்தப்பட்டவன் சிவத்தோடு சம்பந்தப்பட்டவன்.

அறியாமை ஒருநாளைக்கு உயிரைவிட்டு நீங்கலாம்.

புண்ணியம் செய்யத்தக்கது. பாவம் விலக்கத்தக்கது.

புண்ணியத்தை ஆராயும் பற்றுக்கு அன்பு என்று பெயர்.

அன்பு வளர வளரப் பாவம் தேயும்.

அன்பு கனிந்த நிலையில் அருள் ஆகும்.

அருள் என்னும் அன்பு ஈன்குழவி என்பது திருவள்ளுவர் வாக்கு. ★

## 1978 மார்ச் மாத நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 5 | ஞாயிறு | — ஏகாதசி விரதம். |
| 6 | திங்கள் | — பிரதோஷ விரதம். |
| | | — வண்ணைச் சிவன் கொடியேற்றம். |
| 7 | செவ்வாய் | — சிவராத்திரி விரதம். |
| | | — நகுலேஸ்வரர் தேர். |
| 28 | புதன் | — அமாவாசை. நகுலேஸ்வரர் தீர்த்தம். |
| 14 | செவ்வாய் | — கார்த்திகை விரதம். |
| 15 | புதன் | — கொழு. பொன்னம்பலவாணர் கொடி. |
| 20 | திங்கள் | — ஏகாதசி விரதம். |
| 21 | செவ்வாய் | — ஆயிலியம் யோகசுவாமிகள் குருபூசை. |
| 22 | புதன் | — பிரதோஷ விரதம். |
| 23 | வியாழன் | — வண்ணை சிவன் தேர். |
| 24 | வெள்ளி | — பூரணை. பங்குனி உத்தரம். |
| | | — திருக்கோணேஸ்வரம் கொடி. |
| 27 | திங்கள் | — காரைக்காலம்மையார் குருபூசை. |
| 9 | புதன் | — மருதடி விநாயகர் கொடி. |

## அருஞ் சொல்லும் அதன் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | உயக்கம் | — | வருத்தம் |
| 2. | உய்யானம் | — | சோலை |
| 3. | உரகுநீர் | — | கடல் |
| 4. | உரவோன் | — | அறிவுடையவன் |
| 5. | உவகை | — | மகிழ்ச்சி |
| 6. | உவப்பு | — | மகிழ்ச்சி |
| 7. | உறையுள் | — | இருக்குமிடம் |
| 8. | ஊக்குதல் | — | ஆட்டுதல் |
| 9. | ஊசல் | — | ஊஞ்சல் |
| 10. | ஊன் | — | தசை |
| 11. | எயில் | — | மதில் |
| 12. | எல் | — | இரவு |
| 13. | எவ்வம் | — | துன்பம் |
| 14. | எழில் | — | அழகு |
| 15. | எழினி | — | திரைச்சீலை |
| 16. | ஏதம் | — | குற்றம் |
| 17. | ஐது | — | அழகுடையது |
| 18. | ஐயம் | — | சந்தேகம் |
| 19. | ஒறுத்தல் | — | தண்டித்தல் |
| 20. | ஓதை | — | ஒலி |

## பங்குனி மாதமும் உத்தர நாளும்

உத்தர நட்சத்திரத்தில் பூரணை வருவதால் இம் மாதம் பங்குனி எனப்பட்டது. உத்தரத்துக்குப் பல்குணம் என்றும் பெயர். பல்குணம் என்பது திரிந்து பங்குனி யாயிற்று. அருச்சுனனுக்குப் பல்குணன் என்னும் பெயர் பற்குணன் எனவும் வழங்குகிறது. இது வசந்தகாலம் எனப் பொருள் தருவது. உத்தரத்துக்குக் கடையெழுஞ் சனி என்றும், செங்கதிர் நாள் என்றும் பெயர். சூரியன் செங் கதிர்ச் செல்வன் ஆதலில் இப் பெயர் வழங்குகிறது.

பங்குனி யுத்தர மான பகற்போ
தங்க ணிருக்கினி லாயிர நாமச்
சிங்க மணத்தொழில் செய்த திறத்தான்
மங்கல வங்கி வதிட்டன் வளர்த்தான்.

— இராமாயணம்

ஆதியின் உலகம் எல்லாம்
அளித்திடும் அன்னை தன்னைக்
காதலின் வதுவை செய்யக்
கருதினை கணித நூலோர்
ஓதுபங் குனியின் திங்கள்
உத்தரம் இன்றே யாகும்
ஈதுநன் முகூர்த்தம் எந்தாய்
இமையமேல் வருதி என்ருன்.

— கந்தபுராணம்

**நான் என்னும் அகங்காரம் தீமைகளுக்குக் காரணம்**

# தாவர உணவும் தவ வாழ்க்கையும்


தாவர உணவு சுத்தமானது. இயற்கையானது. தாவர உணவு உண்பவர்தம் சிந்தனை சாத்துவிகமாயும் தூய்மையாயும் இருக்கும். அதனால் அமைதியும் அன்பும் அருளும் உண்டாகும். முற்காலம் முதல் இன்றுவரை பெரியவர்கள் தாவர உணவையே உண்டுவருகின்றார்கள்.

தாவர உணவுண்ணல் நல்ல பழக்கம். அது சைவர்களுக்கு மாத்திரம் உரியதன்று. அது எந்நாட்டவர்க்கும் எச்சமயத்தவர்களுக்கும் இயற்கையானது, நிரந்தரமானது, முதன்மையானது, வாழ்வுக்குரியது, வாழ்க்கையோடு ஒட்டியது, நல்லது.

தாவர உணவை உண்டுவந்தவர்கள் நீண்டகாலம் வாழ்ந்து வந்தனர். தாவர உணவினால் நாட்டில் குற்றங்கள், கொலைகள், யுத்தங்கள் உண்டாவதில்லை. வள்ளுவர் முதலாகவுள்ள தமிழ்ப் புலவர்களும், ஒலிவர் கோல்ட்சிமித் முதலாகவுள்ள ஆங்கிலப் புலவர்களும் தாவர உணவின் மேன்மையைக் கூறியுள்ளனர்.


மாமிச உணவருந்துவோர் உள்ளவரையிலும் உலகில் கெடுபிடியுத்தங்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கும் என்று யோர்ச் பெர்னாட் ஷோ எழுதியுள்ளார். தாவரவுணவின் மேன்மையையும் மகத்துவத்தையும் மகாத்மா காந்தி அருமையாக எழுதியுள்ளார். உலகப்புகழ்பெற்ற சிராளி முஸ்லிமோவ் என்னும் பெரியார் 163 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து இருநூற்றுக்கு அதிகமான பீட்டப் பிள்ளைகளைக் கண்டவர். இவர் தம்முடைய நீடித்த வாழ் நாளுக்கும், நோயில்லா வாழ்க்கைக்கும் காரணம் தமது தாவர உணவு என்றும், தாம் என்றாவது ஒரு மிடறு மதுபானமேனும் சிகரெட்டேனும் தொடவில்லை என்றும் எழுதியுள்ளார். தம் கிழப்பருவத்திலும் தம் இருதயம் நன்றாக இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

— தொடரும்



## வசதியுள்ள விடுதி மண்டபம்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி விடுதி மாணவர்களுக்கு வசதியான உறைவிடம் ஒன்றை உருவாக்குவதற்கு மில்க்வைற் தொழிலதிபர் உபகரித்த பெருந்தன்மையைக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர், பெற்றார், பழைய மாணவர் முதலானோர் வெகுவாகப் பாராட்டினார்கள். அன்றி அவருடைய நிழற்படமொன்றைப் பெருப்பித்து மண்டபத்தில் அழகாகத் தொங்கவிட்டுள்ளார்கள்.



AUM

# Master's Voice

*There is not even one thing that is **wrong**.*
*It was all accomplished long **long ago**.*
*We do not know.*
*All is truth.*

1. More precious than life itself is rectitude.
2. We are the servants of Siva.
3. We are lacking in nothing.
4. Our Work is to do Sivathondu.
5. Beleive in **God** with all your heart.
6. What one thinks, that one becomes.
7. Do not put on any outward show.
8. God is the life of our lives.
9. He cannot separate himself from us.
10. We are all in the presence of God.
11. We are all of the same race and religion.
12. Do not stray from the path of **dharma**.
13. Do not follow the path of the senses.
14. Do not ponder on what is past.
15. Avoid pompous and long-winded talk.
16. Call not any man a sinner.
17. Forswear all wrath and jealousy.
18. Associate with those who practise **tapas**.
19. Always seek after what is good.
20. Plant naught but justice in your mind.
21. Wisdom will dawn in those who do service
22. It is good to live with calmness in the world.
23. Sages affirm that all is God's action.
24. No one has understood the whole.
25. Self must be realized by self.
26. We must guard **dharma** like our eyes.
27. All thought in us must die.
28. We must root our faults and study virtue.
29. Gurubhakthi is the greatest blessing.
30. Resolve to kill the three desires.
31. Great men love the feet of **Siva**.

## விரைவில் வெளிவருகிறது

மில்க்வைற் செய்தி ஆசிரியர் எழுதி, **அச்சாகிக்** கொண்டிருக்கும் புதிய பத்தாம் வகுப்பு இந்து சமய பாடத் திரட்டு மிகவிரைவில் வெளிவரும் என்பதை ஆதரவாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகிறோம். **— பதிப்பாளர்**

★ சமயவாழ்வு எல்லாவற்றிலும் மேலான வாழ்வு ★



# வெள்ளி விழா

சைவமும் தமிழும் வழங்கும் திருக்கோணமலையிலே இமாலயத்து ரிஷிகேச பரம்பரையைப் பாதுகாத்து வரும் சிவத் தமிழ்த் தாயார் மாதாஜி அவர்கள் தமது ஆச்சிரமத்து வெள்ளிவிழாவினை வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள். அவ்வமையம் மில்க்வைற் தொழிலதிபர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிய திருக்கோணமலைத் தேவாரப் பதிகத்தைப் பொழிப்புரையோடு அச்சிடுவித்து வழங்கியதோடு, சிவானந்த சுவாமிகளின் அருள்மொழிகளில் 108 வாக்கியங்களைத் திரட்டி ஞான விருந்தாகவும் வழங்கினார். மூன்று நாட்கள் முறையாக நடைபெற்ற விழாவில் பெருந்திரளாக அடியார்கள் கூடியிருந்தனர். வைதிக நெறியைப் பரப்புவதில் அம்மையார் ஆர்வம் உள்ளவர். அவர் இன்னும் பல்லாண்டு பணியாற்றிப் பொன்விழாப் பொலிவுகண்டு மக்களை வாழ்விப்பாராக.



ஔவையார் அருளியது

என வழங்கும்

# கல்வி ஒழுக்கம்

******************

முற்றொடர்:

18. **கூர்மையென்பது குன்றாக் கல்வி.**
அறிவு என்று சொல்லப்படுவது, குறையாத கல்வியுடைமையாம்.

19. **கெடுப்பினுங் கல்வி கேடுபடாது.**
பிறராற்கெடுக்கப்படினும் கல்விப்பொருள் அழியாது.

20. **கேண்மையுடைமை தாழ்விலாக் கல்வி.**
ஒருவனுக்குச் சினேகமுடைமை, குறையாத கல்விப் பொருளை உடையனாய் இருத்தலாம்.

21. **கைப்பொருளென்பது கசடறு கல்வி.**
கையிலுள்ள பொருள் என்று சொல்லப்படுவது, குற்றந்தீரக் கற்றலாகும்.

22. **கொற்றவன் றன்னிலும் கற்றவனுயர்ந்தவன்.**
அரசனிலும் கல்விகற்றவன் மேம்பட்டவன்.

23. **கோதறு கல்வி குவலயந் தருமே.**
குற்றந்தீரக் கற்ற கல்வியானது, பூமியைத் தரும்.

24. **சகல கலைக்குந் தலைமை எழுத்தே.**
சகல கலைகளுக்கும் முதன்மை அட்சமாகும்.

25. **சாத்திரங் கற்றவன் தன்னை அறிந்தவன்.**
வேதம் முதலாகிய பதி நூல்களைக் கற்றவன், தன்னைத் தெரிந்தவனாவன்.

# சாரணீய தர்மம்

முற்றொடர்:-

சாரணன் அகில உலக சகோதரத்துவத்தை அறிந்தவன். அவன் எல்லோருக்கும் உற்ற நண்பன், சகோதரன். ஸ்ரீராமர் சுக்கிரீவனையும், குகனையும், விபீடனனையும் சகோதரராகக் கொண்டு உலக சகோதரத்துவத்தை உண்டாக்கினார். விவேகானந்தர் அமெரிக்கநாட்டுச் சகோதர சகோதரிகளே என்று கொண்டாடினார். சாரணன் அகில உலகத்தையும் ஒரு வீடாகவும், உலகில் உள்ளவர்களை உடன்பிறந்தாராகவும் உறுதியாகக் கொள்பவன். சாரணீயத்தில் ஏற்றத்தாழ்வு, இன மத வேறுபாடு செல்வம் வறுமை என்பன இல்லை. எல்லோரும் சமநிறையினரே யாவர். சமமரியாதையுள்ளவரேயாவர்.

சாரணன் பிரதியுபகாரம் கருதாமல் பிரதிபலனை எதிர்பாராமல் நிஷ்காமியமாக ஊரவருக்கும், நாட்டவருக்கும், உலகத்தவருக்கும் உதவிபுரிபவன். அவன் உயர்திணைவர்க்கத்து மனிதகுலத்துக்கேயன்றி ஊர்வன, பறப்பன, நடப்பன ஆகிய பிராணிகளுக்கும் உயிர்த்தோழன், தொண்டன், உதவி செய்பவன். ஸ்ரீராமருடன் அணிலும், கழுகும் உறவாடிய வகையில் சாரணனுக்கு உயிர்க்கூட்டம் எல்லாம் உற்ற தோழர்களே.

சாரணன் செயலையே கண்ணுங் கருத்துமாகக் கொண்டவன். ஏன் என்று ஆராயும் வேலை அவனுக்கில்லை. யுத்தகளத்தில் அருச்சுனனுக்குக் கிருஷ்ணர் கட்டளையிட்டதைப்போலத் தாடகைக்குமுன் விசுவாமித்திரர் ஸ்ரீராமனுக்கு கட்டளையிட்டதும் ஆராயப்படவில்லை. 'கசபியன்கா' என்னும் கப்பலில் மாலுமி தன் மைந்தனுக்கு

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

**மனிதனுக்கு நல்லொழுக்கத்தை ஞாபகப்படுத்துவது சமயம்**



# சிவலிங்கமும் சிவராத்திரியும்

எந்நாட்டவர்க்கும் இறைவனுகிய சிவபெருமானுக்குரிய அருவத் திருமேனியை ஞானியர்கள் அகக்கண்ணுற் காண்பதும் அரிது. அங்ஙனமாக அடியார்களுக்கு அருள் புரிவதற்கு இறைவன் கொண்டருளும் உருவத் திருமேனிகள் பல. அருவத்திருமேனிக்கும் உருவத்திருமேனிக்கும் இடையில் அருவமாகவும் உருவமாகவும் உள்ளது அருவுருவத் திருமேனி. அதற்கு உறுப்புக்கள் இல்லாமையால் உருவமல்லாதது அதைக் கண்ணுல் காணக்கூடியதால் அஃது அருவமல்லாதது. இங்ஙனம் அமைந்த அருவுருவத் திருமேனியே சிவலிங்கம்.

சிவலிங்கம் பெரிய தத்துவங்களைக்கொண்டது. அது ஆலயங்களில் மிகவும் புனிதமும் அடக்கவொடுக்கமும் அமைந்த கருவறை என்னும் கர்ப்பக்கிரகத்தில் உள்ளது. அதனைச் சூழவுள்ள பிராகாரங்களிலேயே ஏனைய தெய்வத் திருவுருவங்கள் எழுந்தருளி இருப்பன.

சிவலிங்க வழிபாடு மிகவும் புராதனமானது. சிவபெருமானுக்குரிய புனித அடையாளமாகவுள்ளது. ஒரு நாட்டின் கொடி எவ்வளவுக்குக் கௌரவமாக மேலாக உயரமாக அடையாளமாகக் கொண்டாடப்படுகிறதோ, அதைவிட எத்தனையோ கோடிமடங்கு அண்டங்களையும் அதில் உள்ள படைப்புக்களையும் குறிப்பதாகவுள்ளது சிவலிங்கம். சிவலிங்கத்தில் அடங்காதது ஒன்றுமே இல்லை. உலகம், முட்டை, வித்து முதலிய அடைவுப் பொருள்கள் லிங்கவடிவானவையே.

கண்ணுற் காணமுடியாத இறைவனைக்கண்டு தொழுவதற்குக் கண்முன் உள்ளது சிவலிங்கம். கட்புலனுக்குத் தெரியாத தேவர்களை வேதமுனிவர்கள் அக்கினிச் சுவாலையில் வழிபட்டனர். அக்கினிச் சுவாலையே தேவர்களின் பிரதிநிதி. எனவேதான் யாகங்கள், வேள்விகள், ஹோமங்கள், சடங்குகளில் அக்கினியில் அவிசொரிகிருர்கள். அவையாவும் தேவர்களை அடையும்.

அக்கினி பொன்மயமானது அதன் அடிமுடியை அறிந்து கொள்ள முடியாது. பொன்னிறமான அக்கினி குளிர்ந்து கருநிறமாகிறது. முன்னர் ஒருசமயம் பென்னம் பெரிய தேவர்களான பிரம விஷ்ணுக்களுக்கு மெய்யறிவுண்டாக்கியது இலிங்கோற்பவம். அஃதாவது அவர்களுக்குமுன் தோன்றிய அக்கினிச்சோதி குளிர்ந்து இலிங்கமயமானது.

இவ்வைபவத்தைக் குறிப்பது சிவராத்திரி தினமாகும். சிவனடியார்களுக்கு மிகப்பெரிய விரததினம் இது. ஊண் உறக்கமின்றி ஒரு நாள் முழுவதும் இறைவனை உவாசித்து இறைவனுக்கு அண்மையில் இருந்து (உபவாசம்) வழிபடுதல் முறையாகும். அன்றிரவு (அமாவாசைக்கு முதல் நாள் இரவு) நான்கு சாமங்களிலும் இறைவனுக்குப் பலவிதமாக அபிஷேகம், ஆராதனை, அலங்காரம் முதலியன நடைபெறும். அவற்றைக் கண்கொண்டு கண்டு வணங்குதல் பெரும் பயன்தருவதாகும்.

எங்கெங்கே சிவலிங்கங்கள் உள்ளனவோ அத் திருக்கோயில்கள் சிவராத்திரி விழாவுக்கு அமைவானவையாகும். எங்கள் நாட்டில் தேவாரம் பாடப்பெற்ற திருக்கோயில்கள் தமிழரின் சூழலில் உள்ளன. திருக்கேதீஸ்வரம் எமக்கு வசதியானதாய், வாய்ப்பானதாய், வரப்பிரசாதமானதாய் உள்ளது.

திருக்கேதீஸ்வரம் இன்று புனராவர்த்தன மகா கும்பாபிஷேகஞ் செய்யப் பெற்றுப் பாலாவி தீர்த்தக் கரையில் அருள் கொழிக்கின்றது. கௌரியம்பாள் சமேத திருக்கேதீஸ்வரப் பெருமானை வழிபடுவதற்குப் பல்லாயிரவர் கூடுகிருர்கள். பக்திமயமான சூழலில் வீதியெங்கும் மடங்கள் உண்டு. திருவாசகமடத்தில் எத்தனைபேரும் தங்கி இருந்து வர வசதியுண்டு. சிவராத்திரி மடத்தார் சுறுசுறுப்பாகத் தொண்டர்களுக்குத் தொண்டு செய்கிருர்கள். இன்னும் மன்னுர் மாவட்டத்து அரசாங்க ஊழியர், உள்ளூராட்சி மன்றத்தார், போக்குவரத்துச் சபையினர், சனசமூக நிலையத்து இளைஞர்கள் உங்களை வாருங்கள் என்று வரவேற்கிருர்கள். பக்திப்பாடல்கள், இன்னிசை விருந்துகள் இரவிரவாக நடைபெறும். மகாலிங்கப் பெருமானுக்குப் பொதுமக்கள் தம்கையால் நீராட்டி வழிபடுதல் நெஞ்சையுருக்கும். கண்ணீர் வடியச்செய்யும். மெய்யடியார்கள் விரைந்து வாருங்கள். ★



## Divine Nectar

by



Swami Sivananda

1. Religion must flower in the heart of man.
2. Knowledge without wisdom is useless.
3. Man must go back to nature.
4. Truth cannot dwell in a passionate man.
5. We must learn to work together.
6. Every moment is precious.
7. Pure concience is the voice of God.
8. Knowledge is not separate from virtue.
9. What is good is also truth.
10. Humility, courage, truthfulness are treasures.

## வேப்பஞ்சருகு

பொன்நிறமாகப் பழுத்துச் சொரியும் வேப்பஞ்சருகு வீதியெங்கும் குவியலாகக் காணப்படுகிறது. மாநகர சபையார் இதனை வேண்டா வெறுப்பாக அள்ளிப் பள்ள நிலங்களிலும் கடற்கரையிலும் கொட்டி வீணுக்குகிருர்கள். அநுபவமுள்ள கமக்காரர் இதனைக் கவனிக்காமல் இருப்பது விந்தையாய் இருக்கிறது. உடனடியாக உக்கி உலர்ந்து பிடியுரமாக மாறும் தன்மையுள்ள வேப்பஞ் சருகை வீணடித்தல் விவேகமாகாது.

★ ஒழுக்கத்தினின்றும் சன்மார்க்கம் தொடங்குகிறது ★

# திறந்தவெளிச் சிறையில் வழிபாட்டு வசதி

யாழ்ப்பாணம் வலி கிழக்கில் இராச பாதையில் உள்ள திறந்தவெளிச் சிறை வளவில் அமைந்த திருக்கோயிலில் விநாயகப்பெருமான் திருவுருவத்தையும், முருகன் திருவுருவத்தையும் மில்க்வைற் தொழிலதிபர் உபகரித்து விழாச் செய்வித்தார். இவ் வுருவங்களை ஸ்தபதி திரு. சின்னராசா அவர்கள் அழகொழுகச் செய்துள்ளார்.

சென்ற 12-2-78 ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற பெருவிழாவில் உரையாற்றிய தொழிலதிபர் திருக்கோயிலுக்கு வேண்டிய மணியையும் உபகரிப்பதாகக் கூறினார். சிறையில் உள்ள கைதிகளே மணிக்கோபுரத்தைக் கட்டுவதற்கு முன்வந்துள்ளார்கள். இவர்களே ஆலயத்தையும் தங்கள் கைவன்மையால் உருவாக்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

******************************


## மில்க்வைற் செய்தி

மில்க்வைற் செய்தி தேவையானோர் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள். நாங்கள் தபாற்செலவு கட்டிச் செய்தியை அனுப்புவோம்.

நீல சோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2,
பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2,
சலவைப்பவுடர் மேலுறை 2.

மில்க்வைற் த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


******************************

# மாதர் பகுதி

## காரைக்காலம்மையார்

விண்மீன்களுள் சிறந்தனவற்றுள் சுவாதியும் ஒன்று. பங்குனியில் வரும் சுவாதி நாள் காரைக்காலம்மையாரின் குருபூசைத்தினம். நாயன்மாருள் காலத்தால் முற்பட்டவர்களுள் அவரும் ஒருவர். திருமுறை பாடிய பெண் அடியார் என்னும் பெருஞ் சிறப்புக்குரியவர். நல்ல தாய் தந்தையரின் நல்ல பெண்ணாய், நல்ல கணவனின் நல்லற மனைவியாய் இறை விசுவாசத்தில் இணையற்றவராய், அழகுக்கோலத்தை வெறுத்து ஒதுக்கித் தவ வாழ்வில் ஈடுபட்டு இறைவனின் அற்புதக் கூத்தைக் கண்ணாற்கண்டு பாட்டிசைத்தவர். இறைவன் ஆடும் போது அவரடிக்கீழமரும் பெரும் பேற்றையும் பெற்றவர்.

இல்லறமாகிய நல்லறத்திலிருந்தபோது சிவனடியாரை உபசரித்து வணங்கி அருள்பெற்றவர். மூவுலகங்களிலும் பெறுதற்கரிய மாங்கனியை இறைவன் திருவருளால் கையில் பெற்றவர். திருவருட்டிறத்தை வெளியில் சொல்லத் தயங்கியவர். திருவருளாற் கிடைத்த ஞானத்தைக் கொண்டு அற்புதத் திருவந்தாதியும், திருவிரட்டை மணி மாலையும் பாடியருளியவர். திருக்கைலாச கிரியில் தலையால் நடந்தவர். இறைவனால் ''அம்மே'' என அழைக்கப்பெற்றுத் தாயானவர். திருவருளைப் பாடிக்கொண்டிருக்கும் பெருவரத்தை விரும்பிக் கேட்டவர். திருவாலங்காட்டில் திருநடனத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் சிவானந்தத்தைப் பெற்றவர்.

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

## சாரணீய தர்மம்


இங்கே நில் என்று கொடுத்த கட்டளையைச் சிறுவன் கப்பல் எரிந்து தன்னிலும் நெருப்புக்கொளுத்திய போதிலும் அங்கேயே நின்றான். வேதகால முனிவர்கள் மன்னர்களுக்கு இடுங் கட்டளைகள் சிரமேற் கொள்ளப்பெற்றமையால் அக்காலம் சுபீட்சமாய் நிலவியது. பெரியவர்களின் கட்டளைக்கு ஆராய்வுகள் தேவையில்லை. அது அநுபூதியில் நிறைவெய்தும்.

சாரணனுக்கு வெற்றியில் பூரிப்பும், தோல்வியில் சோர்வும் உண்டாகாது. அவன் தன் கடமையிலேயே பூரிப்பு அடைபவன். பசி நோக்கான், கண் துஞ்சான் என்ற முறையில் சாரணன் கடமையே கண்ணாகவுள்ளவன். அவனுக்கு எதிலும் ஊக்கம் குன்றுவதில்லை.

(தொடரும்)

இலட்சியம் இல்லாத மனிதன் திசையறி கருவி இல்லாத கலம் போன்றவன்.

— ஆல்பரி



# யோகம்

வேதம் எல்லோருக்கும் விளங்காது. எல்லோராலும் அதை அப்பியாசஞ் செய்ய முடியாது. எனவேதான் வேதங்களை வகுத்த வியாசபகவான் வேதவாக்கியப் பொருளை வலியுறுத்துவதற்காக இதிகாசங்களையும் புராணங்களையும் எழுதினார். இவை இரண்டையும் சேர்த்துப் புராணேதிகாசங்கள் எனவும் வழங்குவர்.

புராணங்கள் பதினெட்டினுள் கூர்ம புராணமும் ஒன்று. அதில் சிவ மகாத்மியம் உரைக்கும் பகுதி மிகச் சிறப்பு வாய்ந்தது. சிவபெருமான் தாமே உரைத்தருளும் பகுதியைச் சிந்தை செய்வாம்.

நானே காலமாகி உலகில் எல்லாவற்றையும் நடக்கச் செய்கின்றேன். இரண்யகர்ப்பனைப் படைத்து ஞானத்தைத் தந்தேன். நான்கு வேதங்களையும் தோன்றச் செய்தேன். எனது வேறொரு மூர்த்தியான விஷ்ணு உலகத்தைப் பரிபாலிக்கின்றார், என்னிடமிருந்து தோன்றும் உருத்திரன் உலகத்தைச் சங்காரஞ் செய்கிறார். என் அம்சமாக உதித்த விநாயகர் உலகத்தைக் காக்கின்றார். பிரம்மவித்துக்களில் முதல்வரான சுப்பிரமணியர் உலக நன்மைகளைச் செய்கின்றார்.

என்னைச் சரணமடைந்தாலன்றி மாயையை வெல்லலாகாது. எல்லோருடைய இருதய கமலத்திலும் நான் இருக்கிறேன். என்னை உலகத்தவர் அறியாமைக்குக் காரணம் மாயையே தான். அடிக்கடி பிறப்பும் இறப்பும் உண்டாவதற்குக் காரணம் மிருத்யு. மரணத்தை வென்ற எனக்கு மிருத்யுஞ் ஜயன் என்றும் பெயர். எனக்குப் பிரணவமே சரீரம். எனது உருவம் வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதது. சந்திர சூரியர்களின் ஒளிகூட என்னைப் பிரகாசப்படுத்தச் சக்தியற்றவை. எனது ஒளியாலேயே அவை பிரகாசிக்கின்றன.

என்சொரூபம் அன்னமயம், பிராணமயம், மநோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் ஐந்து கோசங்களுக்கும் அப்பாற்பட்டது.

### பிரம்ம யோகம்

எல்லா உபநிடதங்களும் என்னையே பிரம்மம் என்கின்றன. உபநிடதங்கள் வேதங்களின் முடிபானவை. ஆகவே அவற்றை வேதசிரசு என்றும் வேதாந்தம் என்றும் கூறுவர். என்னை அடைவதற்கு இலகுவான வழி பிரம்ம யோகம்.

பிரம்ம யோகத்தில் அபாவயோகம், மகாயோகம், என இருவகை உண்டு. மனோவிருத்தியை இல்லாமற் செய்து உலகத்தில் உள்ள பொருள்களை இல்லாதவை என்று கருதுதல் அபாவயோகம். இதனை அநுட்டிப்போர் என்னை விரைவிற் காண்பர். தன்னையே நிர்மலமான பரமசிவன் என்று எண்ணி ஏகாக்கிரக சித்தமாக நிஷ்டையில் நிற்பது மகாயோகம். இதனை அநுட்டிப்பவர் எனது ஆனந்த சொரூபத்தில் கலந்து மோட்சத்தைப் பெறுவர்.

அட்டாங்கயோகம் எனப்படும் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணம், சமாதி என்னும் எட்டும் பிரம்மயோகத்திற்குச் சாதனமாகும்.

அகிம்சை, சத்தியம், திருடாமை, பிரம்மச்சரியம், அபரிக்கிரமம் என்பன இயமத்தைச் சார்ந்தவை. மனம், வாக்கு, சரீரம் ஆகிய முக்கரணங்களாலும் எவருக்கும் தீமை செய்யாமை அகிம்சை எனப்படும்.

மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களாலும் பெண்போகம் இல்லாமல் இருத்தல் பிரம்மச்சரியம். ஆபத்து வந்து நெருக்கியபோதிலும் எவரிடத்தும் எதனையும் வாங்காமல் இருப்பது அபரிக்கிரமம். தவம், வேத அத்தியயனம், சந்தோசம், சௌசம், ஈசுவர வழிபாடு ஆகியவை நியமம். உபவாசமிருத்தல் தவம், சௌசம் என்பது சரீர சுத்தி. எல்லாவற்றிலும் மேலான சிவபூசை என்பது வாக்கினால் துதித்து, மனசினால் நினைத்து, சரீரத்தால் அர்ச்சித்து வழிபடுதலாம். சிவபெருமானிடத்தில் அசஞ்சலமான பக்தி இருத்தல் வேண்டும். ★

## மநுதர்மம்

மாணவர் படிப்புக்கு முன்னரும் படித்த பின்னரும் ஆசிரியருக்குக் கரங்கூப்பி வணக்கஞ் செய்தல் பிரம்மாஞ்சலி எனப்படும்.

மாணவர் தூய்மையுடையோராய் இருத்தல் வேண்டும். கடமை தவறாது கற்றல் வேண்டும். கவனம் நிறைந்தவராய் இருத்தல் வேண்டும்.

ஆசிரியரின் இருப்பிடத்தில் அமர்வதும் அவருடைய பொருட்களைத் தீண்டிப் பழித்தலும் ஆகா.

ஆசிரியர் வகுப்புக்குள் வரும்போது எழாமல் இருக்கும் மாணவரின் பிராணவாயுவின் உயிர்ச்சக்தி வெகுவாகக் குறையும்.

ஆசிரியரை எழுந்து வணங்குபவர்களுக்கு ஆயுள், கல்வி, புகழ், வலிமை என்பன பெருகும்.

தம்மை வணங்கும் மாணவர்களை ஆசிரியர் நெஞ்சார நீண்டகாலம் வாழ்க என வாழ்த்துதல் வேண்டும். கருணையோடு பார்த்துக் குழந்தைகளைக் கடைக்கணித்தல் வேண்டும். நலமா என்று குசலம் ஆரோக்கியம் விசாரித்தல் தகும். பிரம்பு, கொடிய வசனம் முதலியவற்றைப் பிள்ளைகளிடம் உபயோகிக்காமல் தாய்மை அன்பில் கற்பித்தல் தகும். ★


### மில்க்வைற் தாழ்மையான வேண்டுகோள்

மில்க்வைற் தயாரிப்புக்களை விற்பனை செய்பவர்களும் அவற்றை வாங்குபவர்களும் தயவுசெய்து மேலுறைகளுடன் வாங்குங்கள். மேலுறைகள் பெறுமதியானவை.

திருஆலவாய், — மில்க்வைற் விநியோகப்பகுதி
யாழ்ப்பாணம். 1-3-78 தபாற்பெட்டி 77


**இரு சந்தியா வேளைகளும் தியானஞ்செய்ய ஏற்றவையாகும்**

# பாடுவித்தவனும் பெரியபுராணமும்



பெரிய புராணத்தைப் பாடுவித்தவன் சோழப் பேரரசன் இரண்டாம் குலோத்துங்கன். அவனைச் சென்னி அபயன் குலோத்துங்கச் சோழன் என்றும், அநபாயன் என்றும், செம்பியன் என்றும், சேக்கிழார் ஏறக்குறைய பத்திடங்களில் தமது புராணத்திற் குறிப்பிடுகின்றார். இப்பேரரசன் சோழப் பேரரசை 1133 ஆம் ஆண்டு முதல் 1150 ஆம் ஆண்டு வரை பரிபாலித்தவன் என்று அறியக் கிடக்கிறது.

இங்ஙனம் குறிக்கப்படும் பெயர்களில் சென்னி என்பது சோழருக்குரிய பொதுப் பெயர் என்றும், அபயன் என்னும் பெயர் பிற்காலச் சோழர்தமைக் குறிக்கும் பொதுப் பெயர் என்றும் ஆராய்ச்சியாளர் கருதுவர். அநபாயன் என்னும் பெயரே குறித்த ஒரு சோழ மன்னனுக்குரியது என்று கருதும்போது சேக்கிழார் குறிப்பிடும் குலோத்துங்கன் யாவன் என்று அறியவேண்டியிருக்கிறது. குலோத்துங்கன் என்னும் பட்டப் பெயர் மூவருக்கு வழங்கிவந்தது. அவருள் முதலாம் குலோத்துங்கன் சேக்கிழாருக்கு முற்பட்டவன். இரண்டாம் குலோத்துங்கனுக்கு இராசகேசரி என்னும் பட்டம் உண்டு. மூன்றாம் குலோத்துங்கனுக்குப் பரகேசரி என்னும் பட்டம் வழங்கிவந்துள்ளது.

இங்ஙனமாகப் பூமன்னு பதுமம் பூத்த என்னுந் தொடக்கத்தையுடைய கல்வெட்டு ஒன்றை ஆராய்ந்தவர்கள், அதில்வரும் மெய்க்கீர்த்திகளைக் கொண்டு இரண்டாம் குலோத்துங்க சோழனே சேக்கிழார் பெருமானைக் கொண்டு பெரிய புராணத்தைப் பாடுவித்தான் என்பர்.

அநபாய சோழப் பேரரசன் கலைஞான விநோதனாய்த் தமிழ்ப் பற்றும் சைவப் பற்றும் உள்ளவனாய் இருந்தான். சிவபெருமானிடத்தும் சிவனடியார்களிடத்தும் சிறந்த பக்தியுள்ளவனாய் இருந்து சிதம்பரத் தேவாலயத்துக்குப் பல திருப்பணிகள் செய்து நிறைவேற்றினான். தூய மனம் படைத்த அவன் சிதம்பரத்துப் பேரம்பலத்தைப் பொன் வேய்ந்தும், திருவீதிகளிலும் தில்லையின் எல்லையிலும் பல திருப்பணிகள் செய்தும், வேறுபல திருத்தலங்களில் திருப்பணிகள் செய்தும், தானங்கள் பல செய்தும் தொண்டு செய்தான். இத்தகைய சோழனுடைய மனத்தைத் திருக்கைலாய மலைக்கு உவமையாகச் சேக்கிழார் சுவாமிகள் குறிப்பிடுகின்றார். இதன் பொருள் திருக்கைலையைப் போலவே இவன் மனத்திலும் சிவபெருமான் எப்பொழுதும் எழுந்தருளி இருக்கின்றார் என்பதாம். இச்சோழன் திருநீற்றில் நிறைந்த பக்தியுள்ளவனாயிருந்தமையால் திருநீற்றுச் சோழன் எனவும் பெயர் பெற்றிருந்தான் என்பர். ★

# ஆரைக்கீரை

ஒரு காலடி நாலிலைப் பந்தலடி என்று கம்பர் போட்ட முடிச்சை, ஆரையடா சொன்னாயது என்று ஔவையார் இலகுவாக விடுவித்தார். ஆரை என்று பெயர் பெற்ற கீரையினத்தில் பல இலைக்கறிகள் உள்ளன. ஆரைக் கீரை நான்கு பிளவாயுள்ள இலைகளையுடைய அற்ப பூடு. அது தண்ணீர் தங்கியுள்ள இடங்களில் தானே உண்டாகி வளர்வது. உண்பதற்கும் மருந்துக்கும் மிகவும் உபயோகமானது.

புளியாரை என்றும் புளிக்கீரை என்றும் சுக்காங்கீரை என்றும் வழங்கும் இக்கீரை மிகுந்த உருசியுள்ளது, பித்தத்தைப் போக்கிப் பசியை உண்டாக்குவது. கல்லீரலுக்கு வலுவைத்தந்து மலத்தை இளக்கிக் கழியச்செய்வது. தோலிலுண்டாகும் சொறி, சிரங்கு, தேமல் முதலிய நோய்களுக்கு ஆரைக் கீரை அரிய மருந்தாய் அற்புதமாகக் குணஞ்செய்வது. மூலவாயுவைக் குணப்படுத்தி வாத பித்த கபங்களைச் சமம் செய்வதில் ஆரைக் கீரையைப் போன்ற மலிவான உணவு உலகில் கிடையாது.

தின்றால் உருசைதரும் தீராப் பைத்தியத்தைப்
பொன்றாத நீரிழிவைப் புண்ணுரை - யொன்றுமிந்த
ஊராரைச் சாராம லோட்டிவிடு நாலிதழார்
நீராணக் கீரையது நீ,

பித்த மயக்கமறும் பேருலகின் மானிடர்க்கு
நித்தமருள் வாதகப நேருமோ - மெத்தனவே
மூலக்கிராணி விடு மூலவுதிர மறுங்
கோலப் புளியாரைக்கு

உ
ஓம்

## வாழ வழிவகுத்தவரை வாழ்த்துதல் நமது கடன்

ஒருவரது தனிப்பட்ட வாழ்க்கையோ, ஒரு தாபனமோ பலர் வாழ வழிசெய்யுமாயின் அவை உத்தமமானவை. அவைவாழ்வதால் நாம் வாழ்கின்றோம். எனவே அவற்றை இருதயபூர்வமாக வாழ்த்துதல் நமது கடன்.

சபர்மதி ஆச்சிரமம் — மகாத்மாகாந்தி

**நல்லவர்களுக்கு உலகம் முற்றிலும் நல்லதாய் இருக்கும்**

# மில்க்வைற் தொழிலதிபரின் குளந்தோண்டும் பணி



நம் முன்னோர் ஊர்கள் தோறும் குளங்களமைத்துத் தங்கள் சூழலைப் பசுமையாக்கி வந்தார்கள். குளங்களால் பல நன்மைகளைக் கண்டார்கள். நம் நாட்டில் குளங்களாற் பெயர் பெற்ற ஊர்கள் மிகப் பலவாகும். ஆற்று வளமில்லாது வரண்ட பகுதியாகவுள்ள எங்கள் பிரதேசத்திலே எங்களுக்குக் குளங்கள் வாழ்வளிக்கும் தன்மையுள்ளன.

மழைக்காலத்தில் நமக்குக் கிடைக்கும் மழை நீரைக் கடலிற் பாய்ந்து வீணாகிப் போகவிடாது பயன்படுத்த வேண்டும். வெள்ளத்தைக் குளங்களில் தேக்கினால் அருகிலுள்ள பிரதேசம் பசுமையடையும். அருகிலுள்ள கிணறுகளில் நல்ல ஊற்றுண்டாகும். நீர்மட்டம் குறையாது.

குளங்களைக் காலந்தோறும் ஆழமாக்கினால் அதிக நீர் தங்கிநிற்கும். ஆழமாக்கும்போது எடுத்த மண், தோட்டங்களுக்கு நல்ல பசளையாகும். இலந்தைக் குளம், பாறகுளம், பரவைக் குளம், பிராமணக்குளம், வட்டுக் கோட்டைக் குளம், சுதுமலைக் குளம், சங்கானைக் குளம், கந்தரோடைக் குளம், நந்தாவில் குளம், வேலணைக் குளம், புங்குடுதீவுக் குளம் முதலிய குளங்களை ஆழமாக்குவதற்கு மில்க்வைற் தொழிலதிபர் மண்வெட்டிகளும், மண்ணெடுக்கும் தாச்சிச்சட்டிகளும் உதவினார்கள். நீங்களும் உங்கள் அயலில் குளம் ஆழமாக்க விரும்பும்போது அறிவித்தால் உங்களுக்கும் ஆயுத உதவி செய்வார்கள். ★

---

# விசுவமடுவில் அகதிகள் முகாம்

விசுவமடுப் பகுதியில் அரைகுறையாக வெட்டப்பட்ட காட்டுப் பிரதேசத்தில் அழகிய நீலவர்ணக் கூடாரங்களில் A. B. C. என்னும் மூவிடங்களில் பெருந்தொகையான தமிழ்மக்கள் வசதியற்றிருக்கிறார்கள். ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் தெய்வத்தை நம்பி ஒட்டியுலர்ந்து வாடிவதங்கிக் கிடக்கிறார்கள். வசதி படைத்தவர்கள் நோக்கம் அந்தப்பக்கம் திரும்புமாயின் அந்தளைபேருக்கும் ஓரளவு ஆறுதலளிக்கலாந்தானே. தனியொருவர் எவ்வளவுதான் செய்யமுடியும்? சிந்திப்போமாக.

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வைத்திய சிரோமணி.....

மெங்கும் பள்ளிக் கூடங்களைத் தாபிப்பதற்கு உறுதுணையாய் இருந்த காப்பாளர் அவர். திருநெல்வேலியில் சுப்பிரமணியம் மண்டபம் கல்விமந்திரி கன்னங்கரா அவர்களால் திறந்துவைக்கப்பெற்றது. கரையூரில் தங்கம்மா மருத்துவ இல்லம் நோயாளிகளுக்குத் தாய்மனை போன்றது. சிவபெருமானே தாயுமானவர். பன்றிக் குட்டிகளுக்கும் பால் கொடுத்தவர்.

### கல்லூரியும் பூங்காவும்

சின்னஞ்சிறிய யாழ் நகரிலும் ஒரு சிங்காரப் பூங்கா உருவாவதற்குச் செலவுப் பணம் கொடுத்தவர் பெரியார் அவர்களேயாவார். அது அவரின் பெயரால் நிலவுகிறது யாழ்ப்பாணத்தில் உள்ள பெரிய கல்லூரிகளில் ஒன்றான ஸ்கந்தவரோதயக் கல்லூரி அவரின் நினைவுச்சின்னம். திருக்குறள் பரிபாஷையிற் சொன்னால் எச்சம்.

### பண்டிதமணி அவர்களின் பாராட்டு

பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா அவர்களுக்குத் தொய்வுநோய் தொந்தரவு கொடுப்பது வழக்கம். சிலவேளைகளில் அவர் வேதனைதாங்கமுடியாமல் குனிந்து சுருண்டு சுருங்கிப் போவதும் உண்டு. ஒரு முறை கடும் வேதனையோடு பெரியாரிடம் சென்றார். பெரியாரும் பண்டிதமணியவர்களும் உற்ற நண்பர்கள்.

பெரியார் ஊசி மருந்து பாய்ச்சி நோயின் வேகத்தைத் தணித்துப் பண்டிதமணியவர்களை மூச்சுவிடச் செய்தார். பண்டிதமணியவர்களின் முகத்தில் மலர்ச்சி, மெதுவாகப் புன்முறுவலும் செய்தார். உதட்டில் பாட்டொன்று உதயமானது. பெரிய பெரிய அஸ்திரங்கள் நாராயண அஸ்திரங்கள் போன்ற குளிகைகளை விழுங்கினேன். நோய் தணியவில்லை. ஆனால் கிழவனார் ஊசி போடுவதற்குக் கருவியைக் கையில் எடுத்தார். எனக்கு நோய் பறந்தது. நான் பிரதியுபகாரஞ் செய்வது எங்ஙனம் என்று தெரியாமல் இருக்கிறேன் என்பது பாடலின் பொருள். பாடல் நினைவுக்குவர மறுக்கிறது. அதிலுள்ள அழகிய தொடர் — "கையிலெடுத்தார் கிழவர் காசம் பறந்ததே செய்வதீதென்று தெரியாது."

### பண்டிதமணியைப் பாராட்டியமை


பண்டிதமணி அவர்கள் எழுதிய சமயக் கட்டுரைகள் என்னும் நூல், 5-5-63 ஞாயிற்றுக்கிழமை மாலை முன்னாள் உதவி வித்தியாதிபதி அருள்நந்தி அவர்கள் தலைமையில் வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் வெளியிடப் பெற்றது. அதன் முதற் பிரதியை வைத்திய சிரோமணி அவர்களே கையேற்றுப் பண்டிதமணியவர்களின் சேவையைப் பெரிதும் பாராட்டிப் பேசினார்கள் வாழ்த்தினார்கள்.

### இறுதியாத்திரை

வைத்தியசிரோமணி அவர்கள் 91 வயதுவரை வாழ்ந்து மக்களுக்கு மருந்துதவி வாழ்வித்து 12-1-64இல் இயற்கையெய்தினர். அவரின் இறுதியாத்திரை பெருவிழாவாக நடைபெற்றது. எல்லோர் நெஞ்சிலும் இடம்பெற்ற பிளஸ் அவர்கள் சேவை வைத்திய கலாநிதிகளுக்கு ஒரு முன்மாதிரி வாழ்க அவர் திருநாமம். ★

---

★ ஒழுக்கத்தால் மனம் பரிசுத்தமடைகிறது ★



# சிவானந்தர் வழியில் சிதானந்தர்

புதிய வருடத்துக்கு முதலில் நாங்கள் ஆத்ம பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். நாம் நம்முடைய இலட்சியத்தில் எவ்வளவு முன்னேறி இருக்கிறோம். இன்னும் எவ்வளவு பாக்கி இருக்கிறது. வழியிலுள்ள முட்களை எவ்வளவு அகற்றியிருக்கிறோம். எவ்வளவு பூஞ்செடிகளை நாட்டி இருக்கிறோம். இலட்சியம் கைகூடும் வரையில் ஓய்வில்லாமல் தொடர்ந்து இலட்சியத்தை நோக்கிப் போய்க்கொண்டே இருத்தல் வேண்டும்.

சரியானபடி முயற்சி செய்தால் ஆகாதகாரியம் என்று ஒன்று இல்லை. சாவித்திரி, மார்க்கண்டேயர் முதலானோர் முயற்சியின் மூலம் விதியையே மாற்றிக்சொண்டார்கள். சரியான முயற்சிக்கு எதுவும் சாத்தியமாகும். எனவே துன்பங்களைச் சமாளித்துக்கொண்டு முயற்சியைச் செய்தல் வேண்டும். இதுவே வாழ்க்கை. மனிதப்பிறப்பு இறைவனால் கொடுக்கப்பெற்ற பெரும்பேறு. வரப்பிரசாதம். இதைத் தினமும் சிந்தித்துப்பார்த்து வாழ்வின் இலட்சியத்தை அடைய முயற்சிசெய்தல் வேண்டும். ★

## அங்கும் ——— இங்கும்

இன்று இரவைப் பகலாக்கும் மின்சார வெளிச்சங்கள் நியோன் ஒளிகள் நாட்டுப்புறங்களிலும் உண்டு. ஆனால் இலுப்பெண்ணெய் தேங்காயெண்ணெய் விளக்கில் வாழ்ந்தவர்களுக்கு 5-8-1872 இல் கொழும்பில் முதன் முதலாக காஸ் வெளிச்சம் கிடைத்தது.

★ ★ ★

தனிக் கௌரவம் இன்று எங்கள் மந்திரிமாரின் பெயர்களுக்கு முன்னால் கௌரவ என்று அடைகொடுக்கிறார்கள். ஆனால் இந்தக் கௌரவமான கௌரவத்தை முதலில் கௌவிக்கொண்டவர்கள் அக்காலத்துச் சட்டசபை அங்கத்தவர்கள். அவர்கள் 10-11-1875 முதலாகக் கௌரவிக்கப் பெற்றனர். கௌரவ சேர் முத்துக்குமாரசுவாமி முதல் தமிழர். கடைசித் தமிழர் என்று நாம் கருதக்கூடியவர் அண்மையில் வாழ்ந்த இந்துபோட் கௌரவ சு. இராசரத்தினம் அவர்கள். இவர்கள் 1924-1931 வரை சட்டசபையை அலங்கரித்தவர்.

★ ★ ★

நினைவுச் சின்னமொன்று யாழ்ப்பாணம் முற்றவெளியில் உள்ளது. அது 1875 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்த வேல்ஸ் இளவரசர் (விக்டோரியாவின் மைந்தர் எட்வெட்) நினைவாக நிறுவப் பட்டதாகும்.

## தக்ஷிணாமூர்த்தி

சிவபெருமானின் அருள் மூர்த்தங்களில் தக்ஷிணாமூர்த்தமும் ஒன்று. அது அவரின் திருவுருவங்களில் ஒன்று. அது அருள்மயமானது. அமைதியானது. ஆசிரியர் கோலமானது. சிவபெருமான் ஆலமர நீழலில் தென்திசை நோக்கியிருந்து முனிவர் நால்வருக்கு நால்வேதம் ஆறங்கம் கூறும் பொருளைச் சொல்லாமல் சொன்னவர்.

தக்ஷிணாமூர்த்தியின் திருவுரு சிவன்கோயில்களில் தெற்குப் பிரகாரத்தில் அழகாக அமைக்கப்பெற்றிருக்கும். பிரதானமாகக் கர்ப்பக்கிருகத்திலும் அதன் விமான அடுக்குகளிலும் தக்ஷிணாமூர்த்தம் தென்திசையை நோக்கியிருக்கும். தக்ஷிணாமூர்த்தம் பலவிதமானவை. வீணாகானஞ் செய்யும் தக்ஷிணாமூர்த்தம் ஒருவகை. நால்வர்க்கு உபதேசிக்கும் மூர்த்தம் ஒருவகை. யோக தக்ஷிணாமூர்த்தம் ஒருவகை. தக்ஷிணாமூர்த்தம் இறைவன் அடக்கமாக இருக்கும் நிலை.

ஆலமர் செல்வர் என்று அடியார்கள் பக்தியுடன் பரவிப் போற்றும் தக்ஷணாமூர்த்தம் மோன நிலையே முடிந்த நிலை என்பதை உலகத்தவருக்கு எடுத்துக்காட்டும் பேரின்ப நிலையாகும். மோனமென்பது ஞான வரம்பு.






## திருவள்ளுவர் விழா

திருக்குறள் பரப்புவதில் உவகை கொண்டு உபகரித்து வரும் மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்கள் உரும்பராய் இந்துக் கல்லூரித் திருக்குறள் மன்றத்தாருக்கு உபகரித்த பரிசுகளை அவரின் பாரியார் திருவாட்டி நாகம்மா கனகராசா அவர்கள் வழங்கினார்கள். சென்ற 25-2-78 சனிக்கிழமை காலை கல்லூரி மண்டபத்தில் ஆசிரியர் சி. தாமோதரம்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்கள். திருவாளர்கள் க. கனகராசா க. சச்சிதானந்தம், செ. ஐயாத்துரை, கல்லூரி அதிபர் செ. சிவபாலன் முதலானோர் உரையாற்றினார்கள். ★

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர்: ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-3-78.